சார்பு நீதிமன்றம், குளித்தலை
OS.No. **153 / 2016**

பெயர்: கோபால் பி.வா.சா.1 தேதி **26.06.2024**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி வழக்குரையில் சொல்லியுள்ள உறவு முறைகள் உண்மை தான். எனது பாட்டனார் பட்டன் செட்டியார் என்பவர் இறந்து சுமார் 50 வருடங்கள் இருக்கும் தேதி, மாதம் குறிப்பாக தெரியாது. மேற்படி பட்டன் செட்டியாருக்கு சொந்தமான சொத்துக்களை அவரது மகன்கள் ஆறு பேரும் 1974ம் வருடம் முறையாக பாக பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா வழக்கில் கண்ட எ மற்றும் சி செட்டியூல் சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாகமாக கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி எ மற்றும் சி செட்டியூல் சொத்துக்களை பொறுத்து எனது உடன் பிறந்தவர்களுடன் நான் பாகம் எதுவும் செய்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான், எ செட்டியூல் சொத்து மட்டும் தான் உள்ளது, சி செட்டியூல் சொத்தை எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே விற்பனை செய்துவிட்டார். சி செட்டியூல் சொத்தை எனது தகப்பனார் எப்பொழுது விற்பனை செய்தார் என்றால் 1999ம் வருடம் விற்பனை செய்து விட்டார். தேதி மாதம் குறிப்பாக தெரியவில்லை. மேற்படி சி செட்டியூல் சொத்துக்களை கிரையம் வாங்கிய நபர்கள் தான் இவ்வழக்கில் 8 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். 1999ம் வருட கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 1999ம் வருட கிரைய ஆவணத்தில் வாதி சாந்தி வாதி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் சாந்தியை தவிர மற்ற அனைவரும் கையொப்பம் செய்துள்ளோம். கூட்டுக்குடும்ப சொத்தை வாதியின் அனுமதியின்றி விற்பனை செய்ய இயலாது என்றால் சரியல்ல. எனது சகோதரி சாந்திக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 1988ம் வருடம் திருமணம் நடைபெற்றது. எங்கள் குடும்பத்திற்கு பூர்விக கிராமம் பொருந்தலூர் கிராமம் தெலுங்கபட்டி ஆகும். இவ்வழக்கில் கண்ட எ மற்றும் சி செட்டியூல் சொத்துக்கள் தெலுங்கபட்டி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.எனது உறவினர்கள் மேற்படி பூர்விக கிராமத்தை விட்டு வெளியூரில் வியாபாரம் செய்து வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1974ம் வருட பாக பிரிவினை ஆவணம் எழுதப்பட்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனது தாயார் பெயரிலும் எனது தகப்பனார் பெயரிலும் கிரையம் வாங்கப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் 1974ம் வருட பாக பிரிவினை ஆவணத்திற்கு பின்னர் ஏற்படுத்தப்பட்டவை தான் என்றால் 1974ம் வருடம் ஒரு கிரையம் பெற்றுள்ளார்கள் அது பாக பிரிவினை ஆவணத்திற்கு முன்பாகவா அல்லது பின்பாகவா என்று சரியாக தெரியாது. சி செட்டியூல் சொத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்து தான் தாவா பி

செட்டியூல்கோபால் சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்கு பி செட்டியூல் சொத்தில் பங்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக தாவா பி செட்டியூல் சொத்து தகப்பனாரால் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கப்பட்டதாக பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.1ல் கண்ட சொத்து பாப்பம்மாளின் தனிப்பட்ட சொத்து கிடையாது என்றும் அது பொது குடும்ப நலனுக்காக வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த ஆவணத்தில் எனது தகப்பனார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா பி செட்டியூல் 1வது அயிட்ட சொத்தை பொறுத்து எனக்கோ 7ம் பிரதிவாதியின் மகனுக்கோ தனிப்பட்ட முறையில் ஆவணம் எதுவும் எழுதி வைக்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.4 ஆவணம் 05.02.2019ம் தேதி எழுதப்பட்டதாகும். பி.வா.சா.4 ஆவணம் எழுதிய போது நான் இல்லை பதிவு செய்யும்போது உடன் இருந்தேன். மேற்படி ஆவணம் மதியம் பதிவு செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். மேற்படி பி.வா.சா.4 உயில் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்று நேரடியாக எனக்கு தெரியாது. நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றபோது மேற்படி ஆவணம் பதிவு செய்து முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன் எனக்கு எழுத படிக்க தெரியும். பி.வா.சா.4 ஆவணத்தில் வழக்கறிஞர் ஆரோக்கியசாமி 06.02.2019ம் தேதி சான்று ஒப்பம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் எழுதிய அன்றே பதிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பதிவாளர் அலுவலகத்திற்கு 05.02.2019ம் தேதி தான் சென்றீர்களா என்றால் அன்று தான் சென்றேன். எனது தாயாரை கட்டாயப்படுத்தி பி.வா.சா.4 ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.4 ஆவணம் எழுதப்பட்ட தேதியில் பதிவு செய்யப்படவில்லை என்றால் நான் பார்த்தவரை 5ம் தேதி தான் பதிவு செய்ததாக நினைக்கிறேன். மேற்படி உயில் ஆவணத்தை 5ம் தேதி தான் பதிவு செய்திருப்பார்கள். பி.வா.சா.4 ஆவணத்தை பொய்யாக உற்பத்தி செய்து முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.5 ஆவணம் 12.06.2019ம் தேதி ஏற்படுத்தப்பட்டதாகம். பி.வா.சா.5 உயில் ஆவணம் ஏற்படுத்தியது எனக்கு நேரடியாக தெரியும். பி.வா.சா.5 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட அன்றே பதிவு செய்யப்பட்டுவிட்டதா என்றால் அன்றைய தினமே பதிவு செய்யப்பட்டுவிட்டது. பி.வா.சா.4 மற்றும் 5 உயில்கள் எழுதுவதற்கு முன்பாக வேறு உயில்கள் எழுதப்பட்டு அதை மாற்றி தான் பி.வா.சா.4 மற்றும் 5 உயில்கள் எழுதப்பட்டுள்ளதாக அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு மாற்ற உரிமையுள்ளதால் சொல்லியுள்ளார்கள். பி.வா.சா.6 ஆவணம் 07.05.1975ம் ஆண்டு கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.6 ஆவணம் பூர்விக சொத்தின் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.9 ஆவணம் எழுதி வைக்க எனது தகப்பனாருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.9 ஆவணத்தில் கண்ட சொத்தை பொறுத்து எனது மகன்கள் கடன் வாங்கியிருந்தால் அது வாதியே

கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.7,8 மற்றும் 11 வாதியே கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.13ல் கண்ட சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரியல்ல. பி.வா.சா.13ல் கண்ட சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் தான் அதில் எனது தகப்பனார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பி.வா.சா.14 ஆவணம் வாதியே கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா பி பட்டியல் 4வது அயிட்ட சொத்து பாப்பம்மாள் பெயரில் கூட்டு குடும்ப நலனுக்காக கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதனால் பி.வா.சா.15 ஆவணம் எழுதி வைக்க பாப்பம்மாளுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. 25.04.1974ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தில் கண்ட சொத்து பாப்பம்மாள் பெயரில் கூட்டுக்குடும்ப நலனுக்காக கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை பொறுத்து பி.வா.சா.17 ஆவணம் எழுதி வைக்க பாப்பம்மாளுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு பாகம் கிடைக்கக்கூடாது என்பதற்காக எனது தகப்பனாரும் தாயாரும் தனிப்பட்ட வருமானத்தில் இருந்து சொத்துக்கள் கிரையம் வாங்கியதாக பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.19 முதல் 21 வரையிலான ஆவணங்கள் வாதியின் பாக பாத்தியத்தை எவ்வகையிலும் பாதிக்காது என்றால் சரியல்ல. தாவா சி செட்டியூல் சொத்தில் இருந்து வரும் வருமானத்தை வைத்து தான் எனது தகப்பனார் அரிசி வியாபாரம் செய்தார் என்றால் 1960ம் வருடத்தில் இருந்து தான் அரிசி வியாபாரம் செய்கிறார். அந்த தொழிலையை விரிவுபடுத்திதான் எனது தகப்பனார் அந்த சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. பி.வா.சா.25 ல் எனது தாயார் மற்றும் தகப்பனார் பெயர் கூட்டாக உள்ளது என்றால் இரண்டு பட்டாக்கள் உள்ளதால் இரண்டு பெயரும் சொல்லப்பட்டுள்ளது. பி.வா.சா.25 ஆவணத்தில் ஒரே புல எண் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை இருவருக்கும் விற்பனை செய்துள்ளதால் இருவர் பெயரும் உள்ளது. எனது தகப்பனார் மற்றும் தாயார் பெயரில் கூட்டாக கிரைய ஆவணம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். கூட்டு குடும்ப சொத்து என்பதால் தான் பி.வா.சா.25 ஆவணம் இருவர் பெயரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2013ம் ஆண்டே வாதி இதே நீதிமன்றத்தில் ஒரு பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதன் பின்னர் எனது தாயார் வாதியின் மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.95/2014 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு எனது தாயாருக்கு எதிராக தீர்ப்பாகிவிட்டது என்றால் எனது தாயார் சொத்தை வாங்கியுள்ளதாக தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பை எதிர்த்து எனது தாயார் தாக்கல் செய்த மேல்முறையிட்டு வழக்கும் தள்ளுபடி ஆகி விட்டது என்றால் அந்த வழக்கை சரியாக நடத்ததால் தான் தள்ளுபடியாகி விட்டது. சரியாக நடத்ததால் தள்ளுபடியாகி விட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்குகளால் குடும்ப உறவுகள் சரியில்லாமல் போனதால் தான் வாதி மேற்படி பாக பிரிவினை வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டார் என்றால் காலம் கடத்துவதற்காக எனது தாயார் மீது வழக்கு தாக்கல் செய்து பின்னர் வாபஸ்

பெற்றுக்கொண்டுவிட்டார்.அவ்வாறு வழக்கை வாபஸ் பெற தாக்கல் செய்த மனுவிற்கு நானோ எனது தாயாரோ ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட ஆவணத்தை இவ்வழக்கில் தேவையில்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.28 ஆவணம் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வாதி ஏற்கனவே தாக்கல் செய்த பாகபிரிவினை வழக்கை வாபஸ் பெற்றதை சாதகமாக்கிக்கொண்டு தாவா சொத்துக்களை பொறுத்து நாங்கள் பல ஆவணங்களை ஏற்படுத்தியதால் தான் வாதி மீண்டும் இவ்வழக்கை தாக்கல் செய்ய தள்ளப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக வாதி கொடுத்த அறிவிப்பிற்கு நாங்கள் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் எனக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர் வழக்குரை மற்றும் கூடுதல் எதிர் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது பெற்றோரை தவறான முறையில் வழிநடத்தி ஏற்படுத்தியவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

ஒம்/– கோபால்

ஒம்/ K. இன்ப கார்த்திக்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.